இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டக் கற்கைகள் திணைக்களம்

சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - மட்டம் 3

இரண்டாவது தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை 02 - 2021/2022

**LLU3703/LWU1411-** இலங்கை சட்டங்களுக்கான அறிமுகம்

காலம்: ஒரு (01) மணித்தியாலம்

திகதி: 11.11.2022 நேரம்: மு.ப. 09.30 - மு.ப 10.30

ஒரு (1) வினாவிற்கு மாத்திரம் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "1799 ம் ஆண்டின் செப்டம்பர், 23 ம் திகதி வெளியிடப்பட்ட பிரகடனத்தின் பிரகாரம், சட்டவாக்குனரால் மேற்கொள்ளப்பட்ட விலகல்களுக்கு அமைய உரோமன் டச்சுச் சட்டம் இலங்கையின் பொதுச் சட்டமாக அமைகிறது. எவ்வாறாயினும் நீதிமுறை தீர்ப்புகள் மூலமாக பல ஆங்கிலச் சட்டக் கோட்பாடுகளை கூட்டிணைப்பதன் மூலம் இந்த நிலைமையில் இருந்து நீதி மன்றங்கள் விலகியுள்ளன".
மேற்குறித்த கூற்றுடன் நீர் இணங்குகிறீரா? நீதி முறை பிரகடனம் மூலமாக எமது சட்ட முறைமைக்குள் ஆங்கில சட்ட கோட்பாடுகளை நீதிமன்றங்கள் அறிமுகப்படுத்திய சந்தர்ப்பங்களை ஆராய்க.

2. கார்த்திக் 1980 ஆண்டு கனடாவில் பிறந்தான். அவனுடைய பெற்றோர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த தமிழர்கள் ஆவார். கார்த்திக் 10 வயதாக உள்ள போது அவனுடைய பெற்றோர் இலங்கைக்கு திரும்பியதுடன் யாழ்ப்பாணத்திற்கு சென்றனர். அவன் தனது கல்வியை யாழ்ப்பாணம் இந்து தேசிய கல்லூரியில் பூர்த்திசெய்தான். பாடசாலைக் கல்வியை அடுத்து கார்த்திக் உயர் கல்விக்காக களனிப் பல்கலைக்கழகத்திற்கு உட்பிரவேசித்து அங்கு தனது உயர் கல்வியைப் பூர்த்திசெய்தான். அதனையடுத்து பம்பலப்பிட்டியில் உள்ள DPC வங்கியில் உதவி முகாமையாளராக இணைந்து கொண்டான். 2005 ம் அண்டில் அதே வங்கியில் கடமையாற்றிய சுசரித்தா என்பவளை திருமணம் செய்தான். அவளும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவள் என்பதுடன் அவளின் பெற்றோரும் யாழ்ப்பாணத் தமிழர்கள் அவர். திருமணத்தின் பின்பு சுசரித்தாவும் கார்த்திக்கும் சுசரித்தாவின் பெற்றோரினால் கொடையளிக்கப்பட்ட கிருலப்பனையில் உள்ள வீடொன்றில் வசிக்கத் தொடங்கினர். திருமணத்தின் பெறுபெறாக அம்பிகை மற்றும் அன்பகன் என்ற இரு பிள்ளைகளைப் பெற்றனர். 2010 ஆம் ஆண்டு சுசரித்தா யாழ்ப்பாணக் கிளைக்கு இடமாற்றம் பெற்றாள். கார்த்திக்கும் இடமாற்றம்பெற முயற்சித்தான். எனினும் அவனது முயற்சி வெற்றியளிக்கவில்லை. சுசரித்தாவும், பிள்ளைகளும் யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்து கார்த்திக் உடைய பெற்றோரின் வீட்டில் வசித்தனர். கார்த்திக் கொழும்பிலேயே இருந்தான். 2015 ஆம் ஆண்டில் கார்த்திக் மல்லாவி யாழ்ப்பாணம் என்ற இடத்தில் புதிய வீடொன்றைக் கட்டியதுடன் தமது பெற்றோரை சுசரித்தா மற்றும் பிள்ளைகளுடன் வசிக்குமாறு வேண்டினான். அதன்பின்பு வியாபார நோக்கில் கார்த்திக் நுகேகொடையில் காணி ஒன்றை வாங்கினான். அவன் கிரமமாக அவனுடைய மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு பணம் அனுப்பி வருவதுடன் தனது குடும்பத்தைப் பார்ப்பதற்காக ஒவ்வொரு மாதமும் யாழ்ப்பாணம் சென்று வருவது வழக்கம். 2021 ஆம் ஆண்டு அவன் யாழ்ப்பாணத்திற்கு பயணித்துக்கொண்டிருக்கும் வேளையில் புத்தளத்தில் வாகன விபத்தொன்றை சந்தித்து சடுதியாக இறந்தான்.

(அ) கார்த்திக் தேச வழமைச் சட்டத்தின் கீழா அல்லது பொது சட்டத்தின் கீழா ஆளப்படுகிறான் என சுசரித்தா அறிந்துகொள்ள விரும்புகிறாள். அவளுக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) கார்த்திக் உடைய சொந்த இடம் திருகோணமலையாக இருந்து அவனுடைய குடும்பமும் அங்கு வசித்து வந்திருந்தால் உமது விடை வேறுபடுமா?

*பதிப்புரிமை பெற்றது*